CS (Main) Exam,2021

HXS-C-TML

# தமிழ் / TAMIL

## (கட்டாயத்தாள்) / (Compulsory)

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம்<br>*Time Allowed : **Three** Hours* | மொத்த மதிப்பெண்கள் : **300**<br>*Maximum Marks : **300*** |

## வினாத்தாளுக்கான விதிமுறைகள்

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும் :**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் ***தமிழில் (தமிழ் எழுத்தில்)*** மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL (Tamil script)** unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.*

*Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

**Q1. பின்வருவனற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை வரைக :** *100*

(a) குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டுப் பிரச்சினைகள்

(b) உலக அமைதிக்கான சவால்கள்

(c) தாய் மொழியும் தொடக்கக் கல்வியும்

(d) வாடகைத் தாய்க்கான சமூக அங்கீகாரம்

**Q2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும் விடை எழுதுக :** *12×5=60*

பண்டைய இந்தியாவில் முடியாட்சி மிகவும் செல்வாக்குச் செலுத்தியது. அரசன் அரசின் ஆன்மா என்று அழைக்கப்பட்டான். பண்டைய மதக் குறிப்புகளின் படியும் பழங்கால மத நூல்களின்படியும் அரசன் சமூகத்தின் தெய்வீகப் பிரதிநிதியாக இருக்கிறான். அரசனிடமிருந்து பொருள் உள்ளிட்ட உதவிகள் கிடைப்பதால் மக்கள் தங்களின் மகிழ்ச்சியற்ற வாழ்க்கை நிலையிலிருந்து விடுபட முடிகிறது. அரசன் இல்லாத வாழ்க்கை, துயரம் நிறைந்தது என்பதைப் பண்டைய இந்திய அறிஞர்கள் அவ்வப்போது வெளிப்படுத்தியுள்ளனர். அரசன் அல்லது அரசின் தோற்றம் பற்றிய அறிஞர்களின் கருத்துகள் தெய்வீகக் கொள்கை, அதிகாரக் கொள்கை, பாதுகாப்புக் கொள்கை, சமூக ஒப்பந்தக் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கௌடில்யர் மாநிலங்களை அரசின் முக்கியத்துவம் வாய்ந்த நாட்டின் அன்றாடப் பணிகளையும் நலத்தையும் பேணும் நிறுவனமாகக் கருதினார். அரசனின் தோற்றம் பற்றி அவர் மேடையமைத்து விவாதித்து ஆய்வு செய்யவில்லை. ஆனால் அவர் தமது அர்த்தசாஸ்திரத்தில் பெரிய மீன்கள் சிறிய மீன்களை விழுங்குவதைப் போலவே பண்டைய காலங்களில் வலிமையான கொடுங்கோன்மை பலவீனமானவர்களைத் துன்புறுத்தியது என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். மக்கள் இந்த வகையான அநீதியால் சித்திரவதை செய்யப்பட்டனர். மத்ஸ்ய நியசயா, அதாவது மீன் சட்டம் அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் காடு குறித்த சட்டத்தை ஏற்படுத்தினர். சித்திரவதை செய்யப்பட்ட மக்கள் கூட்டாக ஒரு திறமையான ஒருவனை அரசனாக ஏற்றனர்; அரச நிர்வாகத்திற்காக அவர்கள் தங்கள் விவசாய விளைச்சலில் ஆறில் ஒரு பங்கையும் மற்றும் வணிகத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியையும் அரசனுக்குக் கொடுக்க முடிவு செய்தனர்; அரசன் குடிமக்களின் நலன்களைப் பேணும் பொறுப்பினை ஏற்றான்.

தான் ஏற்படுத்திய விதிகளை ஏற்காதவர்களை அரசன் தண்டித்தான். அரசனுக்குக் கீழ்ப்படியாதது அல்லது அவனை அவமதிப்பது தடை செய்யப்பட்டிருந்ததாகக் கௌடில்யர் குறிப்பிடுகிறார். அரசன் தன் குடிமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சமுதாயத்தில் மக்கள் தங்கள் வீடுகளின் கதவுகளைத் திறந்தே வைத்திருக்கலாம்; பெண்கள் நிறைய நகைகளை அணிந்து கொண்டு தனியாக வெளியில் செல்லலாம்; அரசனின்

ஆட்சி மனிதநேய ஆட்சியாகவும் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் ஆட்சியாகவும் இருந்தால் அத்தகைய அரசும் நாடும் எல்லா வகையிலும் செழிப்படையும். இந்த நியதி பண்டைய நூல்களைப் போலவே கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளது. அரசனின் செல்வாக்கு நிரந்தரமானதல்ல; அவனுடைய அதிகாரங்களும் கட்டுப்பாடற்றவையல்ல. ஆனால் வேத காலத்திற்குப் பிந்தைய காலத்தில் நாட்டின் நிலப்பரப்பு அதிகரிக்க அதிகரிக்க அரசனின் அதிகாரங்களும் மதிப்புகளும் அதிகரித்தன; சமுதாயத்தின் பாதுகாப்பிற்கு மாறாக அரசனின் பாதுகாப்பு அதிகக் கவனம் பெற்றது. அரசனின் தகுதிக்கேற்ப அவனின் பொலிவும் கம்பீரமும் தோற்றமும் மாற்றம் பெற்றன. அவை அரசனுக்குரிய மரியாதையாகக் கருதப்பட்டன. இந்த உண்மையைப் பற்றிய விரிவான விளக்கம் சுக்கிர நீதியில் உள்ளது.

(a) அரசன் மற்றும் நாடு பற்றிய பழங்கருத்துகளைப் பதிவு செய்க. 12

(b) ஏன் 'மீன் சட்டம்' அநீதியானது எனப்படுகிறது ? 12

(c) அரசனுக்கும் குடிமக்களுக்குமிடையேயான உறவின் அடிப்படை யாது ? 12

(d) மனித நேயத்தின் ஆட்சி என்றால் என்ன ? 12

(e) வேதகாலத்திற்குப் பிந்தைய காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை ? 12

**Q3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை :** *60*

இராஜா ராம் மோகன் ராயின் நடவடிக்கைகளுக்கு எதிராக இருந்த இந்திய வர்த்தகர்கள் 'பிரம்ம சமாஜத்தின்' செல்வாக்கை அகற்றுவதற்காக, கி.பி. 1830 இல் 'தர்ம சமாஜம்' எனும் சங்கத்தை நிறுவினர். இதற்கிடையில் ஹென்றி டெரிசியோ இந்துக் கல்லூரியில் நவீனச் சிந்தனைகளைப் பரப்புவதற்காக அகடெமிக் அசோசியேஷன் இன் லாங்குஎஜ் நிறுவினார். இந்தச் சங்கம் நலிந்த மரபுகளையும் மூடநம்பிக்கைகளையும் எதிர்த்து வந்த பிற சங்கங்களை விட வலுவாக இருந்தது; இந்தச் சங்கமே இளம் வங்காளத்தை நிறுவியது. இந்துக் கல்லூரி ஊழியர்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகள் இந்தச் சங்கத்தைச் சிதைத்தது. இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் பின்னர் 'பிரம்ம சமாஜத்தில்' சேர்ந்தனர். இராஜா ராம் மோகன் ராயின் மரணத்திற்குப் பிறகு, இந்தச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பு வங்காள வர்த்தகரான துவாரகநாத் தாகூரின் கைகளுக்குச் சென்றது. 19ஆம் நூற்றாண்டின் நான்காவது மற்றும் ஐந்தாவது பத்தாண்டுகளில் அறிவைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட இது போன்ற சமூக அமைப்புகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. 1851 இல் பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷன் என்ற தேசியவாத அரசியல் அமைப்பு நிறுவப்பட்டது.

பம்பாயிலும் இது போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. நாட்டின் இந்தப் பகுதியில் பணக்கார மற்றும் மரியாதைக்குரிய பார்சிகள் அத்தகைய இயக்கங்களின் தலைமையை ஏற்றனர். இந்தப் பார்சிகள் காலனித்துவ ஆட்சியை ஆதரித்தனர். அவர்கள் வளர்ந்து வரும் இளம் மராட்டிய அறிவு ஜீவிகள்; ஐரோப்பியப் பாரம்பரியத்தில் இயங்கும் எலிபின்ஸ்டன் கல்லூரியுடன் தொடர்புடையவர்கள். ஆங்கிலேயர்களால் நடத்தப்படும் நிர்வாகத்தில் இந்தியர்களின் பங்கேற்பை ஆதரித்த ஆங்கில - மராத்தி 'பாம்பே மிரர்' நிறுவனத்தை நிறுவிய பால்சாஸ்திரி ஜம்பேகர் முக்கியமான அறிவாளிகளில் ஒருவர். அவர் வரிகளை விதிக்கும் காலனித்துவக் கொள்கையை விமர்சித்தார். மற்றொரு அறிவு ஜீவியான ராம் கிருஷ்ணா விஸ்வநாத் மராட்டிய மொழியில் இந்திய வரலாற்றைப் பற்றிய நூலொன்றினை எழுதினார். அதில் அவர் பிரிட்டிஷ் கொள்கைகளை விமர்சித்தார். ஆனால் ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தால் எல்லாவற்றையும் சரியாகச் செய்ய முடியும் என்றும் அவர் நினைத்தார். புனேயிலிருந்து வெளியிடப்பட்ட 'பிரபாகர்' இதழில் தமது கட்டுரைகளை எழுதி வந்த மற்றொரு அறிவு ஜீவியான கோபால் ஹரி தேஸ்முக்

இந்தியா சுதந்திரம் இழந்தமைக்கான காரணத்தை ஆய்வு செய்தார். நிலப்பிரபுத்துவப் பாரம்பரியமும் இந்திய உயரடுக்கினருக்கும் சாமானிய மக்களுக்குமிடையிலான இடைவெளியும் இந்தியா சுதந்திரம் இழந்தமைக்கான இரண்டு முக்கியமான காரணங்களாக அவர் கருதினார்.

1852 இல் நிறுவப்பட்ட பம்பாய் சங்கத்தின் உறுப்பினர்களிடையே ஒரு பெரிய கருத்து வேறுபாடு எற்பட்டது. அப்போது ஆங்கிலேயர்கள் அனுபவித்த அதே உரிமைகளை இந்தியர்களும் அனுபவிக்க வேண்டும் எனக் கோரினர். இதன் விளைவாக உயர் வகுப்பைச் சேர்ந்த மிதமான வணிகர்கள் பம்பாய் சங்கத்திலிருந்து விலகினர். ஜமீன்தார்களால் சுரண்டப்படும் இந்திய விவசாயிகள் பிரச்சினையை சென்னைச் சங்கம் மட்டுமே எழுப்பியது. அந்த நேரத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் மறுஆய்வு செய்யப்பட்டது; எனவே இந்த மூன்று சங்கங்களும் இலண்டனில் உள்ள நாடாளுமன்றத்தில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியால் இழைக்கப்படும் அநீதிக்கு எதிராகப் புகார் மனுக்களை அளித்தன.

*(298 சொற்கள்)*

**Q4.** **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக :** ***20***

ஒவ்வொரு நாட்டின் வரலாறும் அந்நாட்டின் புலியியல் சூழலால் பாதிக்கப்படுகிறது. இந்திய நாகரீகம் தொடக்க காலத்திலிருந்து சுதந்திரமாக வளர்ந்து வருகிறது. வடக்கேயுள்ள மலைகளாலாலும் தெற்கேயுள்ள பெருங்கடல்களாலுமுள்ள ஆபத்தான தடைகள் காரணமாக இந்தியா பெரும்பாலும் உலகின் பிற பகுதிகளிலிருந்து பிரிந்துள்ளது. இத்தகைய இயற்கை அரண்களால் இந்தியாவில் பிறநாட்டுத் தாக்கம் அதிகம் இல்லை. 1600 மைல் நீளமும் மேற்கிலிருந்து 50 மேல் அகலமும் கொண்ட இமயமலை மேற்கிலிருந்து கிழக்காக ஒரு சுவரை உருவாக்கியுள்ளது. கிழக்கில் உள்ள பட்கோய், நாகா, லுஷாய் ஆகிய மலைகளும் அவற்றை சுற்றியுள்ள அடர்ந்த காடுகளும் தகவல் தொடர்புக்குத் தடையாக உள்ளன. மேற்குப் பகுதியிலுள்ள ஹைபர், போலன் கணவாய்கள் வழியாக வெளிநாட்டினர் வருவார்கள். பல நூற்றாண்டுகளாக இந்தியாவுடனான தொடர்புக்குத் தெற்குப் பகுதியிலுள்ள கடல் பெருந்தடையாக இருந்தது. பிற்காலத்தில் கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாக அக்கடல் கடல் வாணிகத்திற்கான எளிய பாதையாக மாறியது. கி.பி. 1498 இல் வாஸ்கோடகாமாவின் தலைமையில் போர்ச்சுக்கீசியர்கள் முதன் முறையாகக் கடல் வழியாக இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் இந்தியா மீது தங்கள் இறையாண்மையை நிலைநாட்ட நீண்ட காலமாக ஒருவருக்கொருவர் சண்டையிட்டனர். எனினும் இந்தியாவின் புவியியல் அமைப்பால் இந்திய நாகரிகத்தின் மீது வெளிநாட்டுச் செல்வாக்கு ஏற்படவில்லை.

**Q5.** பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க : *20*

At the stroke of the midnight hour, when the world sleeps, India will awake to life and freedom. A moment comes, when we step out from the old to the new. It is fitting that at this solemn moment we take the pledge of dedication to the service of India. The service of India means the service of the millions who suffer. It means the ending of poverty and ignorance. It means the ending of disease and inequality of opportunity. The ambition of the greatest man of our generation has been to wipe every tear from every eye. That may be beyond us, but as long as there are tears and suffering, so long our work will not be over. This is no time for petty and destructive criticism, no time for ill-will or blaming others. We have to build the noble mansion of free India where all her children may dwell.

It is a fateful moment for us in India, for all Asia and for the world. A new star rises, the star of freedom in the East, a new hope comes into being. May the star never set and that hope never be betrayed !

**Q6.** (a) கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக : *2×5=10*

(i) முயற்சி *2*

(ii) அழுகை *2*

(iii) அருவி *2*

(iv) அரவு *2*

(v) கானல்நீர் *2*

(b) பின்வரும் இணைகளின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு ஏற்ற சொற்றொடர்களில் அமைத்து எழுதுக : *2×5=10*

(i) தினை - திணை *2*

(ii) சுரா - சுறா *2*

(iii) ஏரி - ஏறி *2*

(iv) விலை - விழை *2*

(v) விழி - விளி *2*

(c) பிரித்தெழுதுக : *1×5=5*

(i) குறுங்காவியம் *1*

(ii) வெண்மதி *1*

(iii) பைங்கிளி *1*

(iv) செங்கோல் *1*

(v) நெடுநீர் *1*

(d) எதிர்ச்சொற்கள் தருக : *1×5=5*

(i) வெற்றி *1*

(ii) ஆக்கம் *1*

(iii) பகல் *1*

(iv) இரத்தல் *1*

(v) அகம் *1*

(e) **எதிர்மறை வாக்கியமாக மாற்றுக :** *1×5=5*

(i) அனுமன் சீதையை இலங்கையில் கண்டனன். *1*

(ii) மாதவி இந்திர விழாவில் கொடிக் கூத்து ஆடினாள். *1*

(iii) வானின்று நெருப்பு மழை பொழிவதுண்டு. *1*

(iv) அவன் பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவான். *1*

(v) மாணவர்கள் பள்ளிக்குக் கட்டாயம் வர வேண்டும். *1*

(f) **பிழை நிக்கி எழுதுக :** *1×5=5*

(i) பள்ளி வளாகத்தில் பறவை பறந்தன. *1*

(ii) ஆனி மாதம் மலைப் பெய்தது. *1*

(iii) ஆசிரியர் பணி என்பது ஓர் அரப்பணி ஆகும். *1*

(iv) புரவழிச் சாலைத் தொடக்கம். *1*

(v) மாதவி நடனம் பயின்றால். *1*